எடுத்துச் செல்லுகிற பணத்தைக் கொஞ்சம் பாதுகாத்து எடுத்துச் செல்ல வேண்டும் என்று வசதிகள் கேட்டார்கள். அதை நினைத்துச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களும் பாதுகாப்பான இடத்தில் தங்கள் பொருளைக் கொட்டி வைப்பதற்கும் எந்தவித சந்தேகம் இல்லாத அளவுக்குப் பயன்படுத்தி அவர்கள் அளந்து தரவேண்டும் என்பது போன்ற வசதிகளை அரசாங்கம் செய்து தருகிறது. இப்படிப்பட்ட வசதிகளைச் செய்யத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் எந்தெந்த வகையில் நன்மை செய்யவேண்டுமோ அத்தனையும் அரசாங்கத்தின் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதில் ஆட்சேபணையில்லை. ஆனால் வழக்கு மன்றத்தில் 'செஸ்' என்ற முறையில் சேல்ஸ் டாக்ஸ் வசூல் செய்து கொண்டிருப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னதன் காரணமாக, 'செஸ்' என்று இருப்பதை 'பீஸ்' என்று ஆக்கவும் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். இது எல்லோருக்கும் துணையாக இருக்க வேண்டுமென்று தான் நாம் விரும்புகிறோம். கட்டாயமாக விவசாயிகள் இங்கேதான் தங்கள் பொருள்களை விற்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் பரவ வேண்டும். அதற்கு நாம் மிகுந்த பிரசாரம் செய்ய வேண்டும் விவசாயப் பெருமக்கள் மத்தியிலே. இப்படிச் செய்வது எல்லோருக்கும் நன்மையாகும். இறுதியாக இதை ஆதரித்துப் பேசிய அனைவருக்கும் நன்றி கூறி இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 (L.A. Bill No. 29 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : As there are no recommendations to the clauses, the Long Title and the Enacting Formula, the Bill will be returned to the Assembly without any recommendations.

(4) *The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970)*

THE HON. THIRUMATHI SATHIAVANIMUTHU : Mr. Deputy Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill*, 1970 (Legislative Assembly Bill No. 30 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

*Printed as Appendix V.

While moving the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970, for the consideration of the House, I have already explained in detail the need for amending sub-section (1) of section 18 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959). It was considered that if the levy is called a fee, then much of the complexity arising out of Article 286 of the Constitution and the Central Sales Tax Act, 1956 would not arise. The quantum of maximum fee was also reduced. It was, accordingly, proposed to amend sub-section (1) of section 18 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, empowering the Market Committee to levy a fee only and make consequential amendments in other sections of the Act. To give effect to the above objects, the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance 3 of 1970) was promulgated by the Governor.

The Bill now before the House seeks to replace the aforesaid Ordinance by an Act of the Legislature. Sir, I commend this motion for the acceptance of the House.

DEPUTY CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இதற்கு முன்பு நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மேல் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசியபோது, நல்ல கருத்துக்களை வெளியிட்டார்கள். இதை நடைமுறையில் நடத்துவதில் இருக்கிற சிக்கல்களைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயிகள் அங்கே கொண்டு வந்து விற்பதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. எவ்வளவு தான் நாம் கோவாபரேடிவ் சொசைடி மூலமாகக் கொடுத்தாலும் கூட, அவர்கள் வியாபாரிகள் பக்கம் தான் போகிறார்கள் என்றால், பல வருஷங்களாக உள்ள தொடர்பை அறுத்துக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இப்போது மார்க்கெடிங் கமிட்டி சரக்குகளை விற்றால் தான் பணம் கொடுக்க முடிகிறது. வேறு ஏதாவது பணம் கொடுத்து உதவுவதற்கு வகையில்லை. சரக்குகள் விற்கவில்லையென்றால், சரக்குமேல் உடனடியாக அவர்கள் தேவைகளுக்காகப் பணம் கொடுக்கமுடியாத நிலைமை இப்போது இருக்கிறது. க்ஷேம நல நிதி என்று இருந்தாலும் பணம் கொடுக்கச் சட்டமில்லை. அந்த இடங்களில் மார்க்கடிங் யார்டு, கோவாபரேடிவ் லெண்டிங் சொசைடி, சரக்குகளை வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தேவைக்குத் தக்க பணத்தை வாங்கிக் கொண்டு போவது மாதிரி ஏற்பாடு செய்தால், அந்த மார்க்கடிங் கமிட்டிகள் செயல்படுவதற்கு உதவியாக இருக்கும் என்பதை நான் நடைமுறையில் பார்க்கிறேன். அந்த முறையை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்

கொள்கிறேன். கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டோடு இணைத்துப் பணி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று பல வருஷங்களுக்கு முன்னாலே ஆதோனியிலே நம் மாநிலம், ஆந்திரம் இரண்டும் ஒன்றாக இருந்தபோது ஒரு 'கான்பரன்ஸ்' போட்டார்கள். அந்த கான்பரன்சில் இந்த கோவாபரேடிவ் சொஸைடியைக் கொண்டு வந்து பணம் வரவு செலவு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னேன். 18 வருஷங்கள் ஆகிவிட்டன. காலம் தாழ்ந்து போனாலும்கூட அந்த மாதிரி முறையைக் கையாண்டால், இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடக்கும் என்பது என் அனுபவ பூர்வமான எண்ணம். அந்த முறையைச் சீக்கிரமாக அமுல் நடத்துவதற்குக் கூட்டுறவுத் துறையையும் இந்தத் துறையையும் இணைத்து அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*THIRU A. R. DAMODARAN : I come from a district where these agricultural produce markets are working very well and, therefore, when the Government have brought forward the measure to validate the past collection of cess, I welcome the measure. But as far as this Bill is concerned, I would like to mention a few difficulties that are likely to crop up in its implementation. First, Sir, a great deal of emphasis has been laid on changing the word 'Cess' to 'fee.' In my opinion, there is only as much difference between these two words as between tweedledum and tweedledee as far as this Act is concerned. In the old Act, a cess of 50 paise could be collected and this is now sought to be reduced to 45 paise for every hundred rupees and this would be termed as 'fee.' In the old Act under section 5 (4), the Government shall, as soon as may be, after the establishment of a market by a market Committee under sub-section(3), declare by a notification,the area of the market and such area around the market as may be specified in the notification to be a notified market area for the purpose of this Act in respect of any notified special produce. Therefore, it is implied that any agricultural produce that is sold outside the marketing godown premises is also liable for the cess. According to the old Act, as far as the cess is concerned, it would not be questioned from the point of view of the persons who have to pay cess. In so far as the conflict mentioned in the Article in the Writ Petition is concerned, protection is necessary, if the Government have to levy a fee. If the Government have to levy a fee, a distinct service must be rendered for the purpose. But in this case, they want to collect fees from ryots within the notified area, which may be 4 or 5 miles from the Market Committee premises. In my opinion, the collection of such a fee from a ryot outside the Market Premises Committee would be considered illegal because no service is rendered by the Market Committee to the ryot outside the Market Committee premises. If the produce is brought to the Market Committee godowns, then the Market Committee would be perfectly entitled to levy a fee, because it is rendering service in allowing the ryot to bring his produce within the market area, to store the produce, to dry it and then take part in the formality

of an auction that takes place. All these are services rendered and the Market Committee would be perfectly entitled and legally justified in collecting a fee. I shall go into the question of the way in which a fee should be levied at a later date. According to this Act, it is difficult to collect a fee from a ryot who sells his produce outside the market committee godown area.

The second point which I want to mention is this. Here they have expressed a fee in terms of so much percentage of the turnover of the produce. They say they will collect 45 paise for every 100 rupees worth of the produce, whether it may be termed as 'cess' or 'fee.' The fact that you are levying a fraction of the turnover amounts almost to a turnover tax. This fee which is sought to be levied may be considered to be in the nature of a turnover tax and if it is considered as a turnover tax, then it would attract all the difficulties that the present Act attracts by way of conflicting with the Articles in the Constitution with regard to inter-State commerce and the Central Sales Tax Act, where a maximum has been prescribed which would be collectible on such produces. Therefore, my submission is that as I anticipate some difficulties are likely to arise —and as the Marketing Committees are working very well — especially in South Arcot district they have been a great boon to the farmers for getting legitimate price for their produce — I would suggest that the levy of a fee be linked up to the number of bags entering the market area and, if necessary, that it be increased to 65 or 75 paise per bag of 80 kilograms, so that legal difficulties may not arise. I am sure the Legal Department would have gone into this question and perhaps they may not have doubts about it. But personally I have in view the many decisions given regarding the collection of fee and collection of cess. As the Leader of the Opposition pointed out, if you levy a fee on groundnut, it has to be linked up to the marketing expenses incurred by the Marketing Committee in gathering this groundnut and effecting a sale, etc., and all sorts of legal complications are likely to arise. With this intention, I would like to suggest that if, instead of making the fee a percentage of the turnover of the price of the product, it is linked up to the number of the quantity of the bags entering the godown, possibly we may have ample justification to say that we are expending money on constructing godowns, on storing these bags etc., and I would like the Government to consider and inform us whether they are fully satisfied that this would be legally possible and if they do not anticipate any difficulties in the collection of such fees. 5–40 p.m.

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கு முந்தைய மசோதாவின் பேரில் சொன்னமாதிரி நமது மாநில விவசாயிகளுக்கு மிக நன்மை பயக்கக் கூடிய சட்டம் இது. இதில் பல சிக்கலான பிரச்னைகள் அடிக்கடி எழுகின்றன. கூட்டுறவு, மார்க்கெடிங் சொசைடிகளில் அனுபவசாலிகள் இருக்கிறார்கள். விவசாய இலாகாவினால் நடத்தப்படும் மார்க்கெடிங் கமிட்டிகள் இருக்கின்றன.

இவைகளிலே இந்தத் திருத்த மசோதாவில் கொண்டு வந்திருக்கும் திருத்தங்களைத் தவிர, வேறு பல சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. உதாரணமாக ஒன்று இரண்டு வண்டி நிறைய மணிலாக் கொட்டை கொண்டுவருகிறார்கள் என்றால், அதைக் கொண்டுவந்து மார்க்கடிங் கமிட்டியிலே இறக்கி வைத்து விட்டு விலை இறங்கிவிட்டதனால் 10 நாட்கள் கழித்து விற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவர்கள் பேசாமல் கைகட்டிக்கொண்டு போக வேண்டும். 5 ரூபாய், 10 ரூபாய் என்று சிலவுக்குக் கொடுப்பார்கள். அதே விவசாயி இரண்டு மணிலாக்கொட்டை மூட்டை வண்டிகளை வியாபாரிகளின் கடைகளில் வைத்தால், ஆயிரம் 500 ரூபாய் என்று வாங்கிக்கொள்ள முடியும். அவர்கள் தங்கள் அவசரச் செலவுகளைச் சமாளித்துக் கொள்ள முடியும். தனிப்பட்ட வியாபாரிகள் சரக்கை வைத்துக்கொண்டு பணம் கொடுக்கிறார்கள். இந்த வசதி மார்கட்டிங் கமிட்டிகளில் இல்லை. இதை நான் ராமநாதபுரம் மார்க்கடிங் கமிட்டித் தலைவர் அவர்களைக் கலந்துகொண்டு தான் தெளிவாகப் பேசுகிறேன். கோவாபரேடிவ் சொசைடிகளுக்கு இந்த வழக்கம் இருக்கிறது. அந்த சொசைடிகளில் 100 ரூபாய் பெருமான சரக்கு வைத்தால், 100க்கு 75 வீதம் ''அட்வான்ஸ்'' கொடுக்க இடம் இருக்கிறது. அந்த வசதி இந்த மார்க்கெடிங் கமிட்டிகளிலே இருக்க வேண்டும். அப்படியிருந்தால் தான், மேலும் இவைகள் நன்றாக நடக்க முடியும். இதையெல்லாம் யோசித்து, திருத்தங்கள் செய்து பைலாவைத் திருத்திச் செயல்படுத்த வேண்டும் என்பது என்னுடைய அவா. திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தம்முடைய வாழ்க்கையில் பெரும் பகுதியைக் கூட்டுறவு துறையில் அந்த ஸ்தாபனங்களுக்காகச் செலவிட்டவர். அவரைப் போன்ற விவரம் தெரிந்தவர்கள் 8, 10 பேரைக் கொண்டு ஒரு குழு அமைத்து, இந்த இரண்டு சட்டங்கள் தவிர வேறு பல என்னென்ன சிக்கல்கள் இருக்குமோ அவைகளையும் திருத்தி, இந்த மார்க்கெடிங் கமிட்டிகளுக்கு நல்ல எதிர்காலத்தை உண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்களும், மதிப்பிற்குரிய திரு. தாமோதரன் அவர்களும் எடுத்துக் கூறியது போல, பல சிக்கல்களை உணர்ந்து அவர்கள் கூறிய ஆலோசனைகளையும் அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும். ஆனால் இப்போது ஸ்டேட் மார்க்கெடிங் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை மாநில அளவில் போட வேண்டுமென்று அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்குத் தரப்படுகிற வசதிகளைப்போல மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் கூறியது போல, கொண்டு வருகிற பொருள்களை வைத்துக்கொண்டு அவர்களுக்கு முதலில் உதவியாக ஒரு சிறு தொகை அளிக்கக் கூடிய வகையில் பல வசதிகளையும் மேலும் 100 ரூபாய் விற்பனை செய்யக் கூடிய பொருள்களுக்கு 50 காசு என்ற வீதத்தில் வசூலிக்கப்படுகிற செஸ் அல்லது கட்டணத்திற்குப் பதிலாக அந்தந்த மார்க்கெடிங் கமிட்டிகள் வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஏதோ ஒரு சிறு தொகை வசூலிக்க வேண்டும் என்று கட்டணம் என்ற பெயரில் மாற்றியமைத்திருக்கிறோம்.

9th September 1970] [திருமதி சத்தியவாணிமுத்து]

இது கூட ஒரு வரி என்று சொல்ல முடியாது. எவ்வளவோ வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்குத் தான் கட்டணம் என்று சொல்லி வசூலிக்கிறோம். வரி என்று சொன்னால் ஹைகோர்ட்டில் கூடாது என்றதால் கட்டணம் என்று சொல்கிறோம். இதுதான் திருத்தத்தில் முக்கியமான அம்சமாகும். இப்படிப்பட்ட மார்க்கெடிங் கமிட்டிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுப்பது பற்றித் தனியாக ஆலோசனை செய்கிறோம். கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு என்னென்ன நன்மைகள் செய்து தரமுடியுமோ அதை ஆலோசிக்க வேண்டும். இது இந்தத் திருத்தச் சட்டத்தில் இல்லையென்றாலும் அரசாங்கம் பரிசீலனை செய்து ஆவன செய்யும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் வேறு ஏதாவது சட்டச் சிக்கல் இருக்குமா என்பதைப் பற்றியெல்லாம் அச்சத்தோடு கூறியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் சட்ட இலாகா தீவிர பரிசீலனை செய்துதான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறது. இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று உங்கள் முன்னால் திருத்த மசோதாவை வைத்திருக்கிறேன். மேலும் பிரச்னைகள் எழுமானால், சட்ட இலாகா கவனித்துக்கொள்ளும் என்று உறுதியளித்து இதற்கு ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L. A. Bill No. 30 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 11, clause 1, the Long Title, and the Enacting Formula were put and carried.

THE HON. THIRUMATHI SATHIAVANIMUTHU: Mr. Deputy Chairman, I move—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.